**தலைப்பு 210 - தகவல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தகவல் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்கள் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 210 – தகவல் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல்

அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு | 1.செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை. | 2.2.1 |

| | | | |
|---|---|---|---|
| | செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்து வதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தமை | 2. பதிவேடுகளும் புத்தகங்களும் பேணாதிருந்தமை<br>3. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளாமை<br>4. செயற்திட்டங்களை பூர்த்தி செய்யப்படாமல் விட்டுவிடப்பட்டிருந்தமை | 2.14<br>2.2.2(ஆ)<br>2.2.2(அ) |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.8 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்வில் குறைபாடுகள்<br>2. சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.3(ஈ)<br>2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.7 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் (கண்காணிக்கும் பொருட்டு போதிய ஒழுங்குகள் மேற்கொள்வது அவரின் பொறுப்பாக உள்ளதெனவும்) | சேதங்கள் தொடர்பான பொறுப்பு | 2.5 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 திணைக்களத்தின் பிரதான பணிகள்

---

(அ) அரச கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் உட்பட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காலரீதியான செயற்பாடுகள் தொடர்பான பொதுமக்களை அறிவூட்டுதல்.

(ஆ) உயர்ந்த ஊடாக கொள்கையொன்றை கட்டியெழுப்புதல்

(இ) அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய விசேட செயற்திட்டங்கள் தொடர்பாக குறுந் திரைப்படங்கள் தயாரிப்பு மற்றும் அறிக்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்தல், காட்சிப்படுத்தல் மற்றும் மதிப்பீடு

(ஈ) மேற்குறித்த அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல்.

## 2.2 செயலாற்றல்

---------------------

### 2.2.1 திட்டமிடல்

------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு வரைபடம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிர் மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பணிகளை நிறைவேற்றுதல்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்துக்குரிய நிறைவேற்றப்பட வேண்டிய 08 தந்திரோபாயங்களுக்குரிய 57 செயற்பாடுகளுக்கிடையே 07 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 4.8 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | செயற்பாடுகள் | நிதியளிப்பு | மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| (i) | தகவல் தொழில்நுட்ப அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை பாடசாலை மட்டத்தில், கிராமிய நகர வங்கிகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஊடகப் பயன்பாடு தொடர்பாக அறிவூட்டுதல். | உள்நாட்டு நிதியம் | 0.5 |
| (ii) | தேர்தல்கள் சந்தர்ப்பத்தின் போது ஊடக ஒருங்கிணைப்பாளராக செயற்படுதல் | உள்நாட்டு நிதியம் | 0.8 |
| (iii) | ஊடகவியலாளர்களுக்கான உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சி | உள்நாட்டு நிதியம் | 1 |
| (iv) | தேசிய ஊடக பயிற்சி நிறுவன மொன்றுக்காக திட்டங்களை தயாரித்தல் மற்றும் அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலந்துரை யாடல்களை நடாத்துதல். | உள்நாட்டு நிதியம் | 1 |
| (v) | ஊடகவியலாளர்களுக்காக நலன்புரி வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்தல் | உள்நாட்டு நிதியம் | 0.5 |
| (vi) | இலத்திரனியல் மற்றும் அச்சீட்டு ஊடகங்களில் விளம்பரப்படுத்துகின்ற வியாபார விளம்பரங்கள், அரசியல் ரீதியான, மகளிர் மற்றும் சிறுவர் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பாக தேவைப்பாட்டின் பேரில் அறிக்கை தயாரித்தல். | உள்நாட்டு நிதியம் | 1 |
| (vii) | காலரீதியாக முக்கியமான தலைப்பொன்று மற்றும் ஊடகத்துறையில் புதிய போக்கு தொடர்பாக பரீட்சித்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல். | | |
| | | | 4.8 |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த முதலாவது தந்திரோபாயத்தின் 18 செயற்பாடுகளில் 06 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 3.2 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில்

எதிர்பார்க்கப்பட்ட பௌதீக வெளியீட்டு மட்டத்தை அடைந்திராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், நான்கு நிகழ்ச்சிக்குரிய வெளியீட்டின் நிதிப்பெறுமதி வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்காமையால் விளைவற்ற நிதிஏற்பாட்டை கணக்கீடு செய்ய முடியாதிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பிரதான செயற்பாடு | | பணிகள் | மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு (ரூபா மில்லியன்) | செயலாற்றல் குறியீட்டியின் பிரகாரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிறைவேற்றப்பட வேண்டிய அளவு | நிறைவேற்றப்படாத அளவு | விளைவற்ற நிதி ஏற்பாடு (ரூபா மில்லியன்) |
| | | | | அலகு | அலகு | |
| அரச கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடு உட்பட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மக்களை அறிவூட்டுதல் | (i) | 2017 ஆம் ஆண்டில் சகல அமைச்சுக்கள் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக மக்களை அறிவூட்டும் கலந்துரையாடல் தொடரொன்றை மேற்கொள்ளல் | 0.62 | 52 | 47 | * |
| | (ii) | மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக ஊடகவியாளர்களை அறிவூட்டும் செயலமர்வுகளை நடாத்துதல் | 0.56 | 8 | 8 | 31 |
| | (iii) | நடப்பு விடயங்கள் தொடர்பாக ஊடகவியாலர்களை அறிவூட்டும் செயலமர்வுகளை நடாத்துதல் | 0.77 | 16 | 3 | 92 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | வெவ்வேறு அமைச்சுக்கள் ஊடாக மேவுகை நடவடிக்கைகள் எடுத்தல் | 0.60 | 200 | 144 | * |
| (v) | பாராளுமன்ற ஊடக மேவுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 0.18 | 12 | 6 | * |
| (vi) | பாடசாலை மாணவர்களுக்கான ஊடக செயன்முறை | 0.50 | 12 | 9 | * |

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 யூன் 28 ஆந்திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் கீழ் உள்ள கொம்டிரோலர் நாயக அலுவலகத்தினால் வாகனங்கள், பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள், நிர்மாணங்கள், காணி, அலுவலகங்கள், உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் தொடர்பாக அந்த அலுவலகத்திடமிருந்து தகவல் கோரப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் அத்திணைக்களத்தினால் வாகனங்கள் தொடர்பாக தவிர ஏனைய உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------

2015 மார்ச் 25 ஆந் திகதி பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்த 2011 ஆம் ஆண்டின் போது குத்தகை முறைமையில் பெற்றுக்கொண்ட இரட்டை கெப் வண்டியொன்று 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் மீண்டும் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வண்டி 2016 திசெம்பர் 26 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அமைச்சு வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறையான சாத்திய ஆய்வொன்று மேற்கொள்ளாது 2.1 சதவீத வட்டி விகிதத்தின் அடிப்படையில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதி தகவல் திணைக்களம் மற்றும் பிரான்ஸ் வழங்குனர் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கடன் உதவியின் கீழ் 9,150,000 பிரான்ஸ் பிரேங்க் இற்குச் சமமான ரூபா 102.2 மில்லியனுக்கு 2003 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட நிற இரசாயன கூடத்திற்கான உபகரணங்கள் 2016 யூலை வரையிலும் விளைவற்றும் உரிய பராமரிப்பு இன்றியும் காணப்பட்டன. இது தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட மூன்று நபர்களை கொண்ட குழுவின் பரிந்துரையானது அந்த இயந்திரத்தை அமைச்சரவை அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொண்டு பகிரங்க கேள்வி கோரலின் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊடக புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது நிதி மற்றும் ஊடகத்துறை அமைசசிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வானொலி மற்றும் ரூபவாஹினி புலனாய்வு முறைமை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் 06 மாதங்கள் காலமாக முழுமையாக செயற்பாடற்று காணப்பட்டது.

(iii) திணைக்களத்தினால் 1991 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 17-8769 ஆம் இலக்க மோட்டார் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உருக்குலைந்தும் 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 6,490,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வண்டியொன்று 2017 திசெம்பர் மாதம் வரையிலும் கணக்காய்வு திகதி வரை பயன்பாடற்று காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மேற்கொண்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தியின் 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) 2016 ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

-----------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 34,591,957 ஆன பொறுப்புக்கள் கணக்காய்வு திகதியான 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 11 செலவினங்களுக்குரிய ரூபா 1,309,759.09 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சேதங்கள் தொடர்பாக பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 103(1) இன் (இ) (ஊ) மற்றும் (ஐ) பிரிவுகளின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய உத்தியோகத்தர்களால் அதற்காக செலுத்த வேண்டிய தொகையின் அளவு தீர்மானிக்கப்பட்டு அத்தொகையை நிரப்புமாறு அவர்களுக்கு தீர்மானித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் வங்கி, காப்புறுதி கம்பனிகளின் பிணை சான்றிதழ்களின் உரித்து சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னால் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 09 உபகரணங்கள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் திணைக்களத்திற்கு மீள கையளிக்கப்படாதிருந்ததுடன் அவை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் பற்றாக்குறையாக காட்டப்பட்டிருந்தன. அந்த

உத்தியோகத்தர்களுக்கு எதிராக நிதிப்பிரமாணம் 156(1)(ஆ) பிரகாரம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக திணைக்களத்தால் சீர் செய்யப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| (அ) | 2014 | 4.2 | 2007 பெப்ரவரி 24 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/140/2007 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கைக்கு முரணாக ஊடக அபிவிருத்தி கருத்தரங்கு / கலந்துரையாடல்களுக்காக அதிக விலைகளில் ஆடம்பர அறை வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 611,788 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கான ஆவணங்கள் எதுவும் திணைக்களத்தின் கொள்வனவுப் பிரிவில் காணப்படவில்லையென 2015 திசெம்பர் 24 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2014 | 4.13 | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஊடகக் கலந்துரையாடல்களுக்காக உணவு வழங்கும் போது ரூபா 1,156,288 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2014 | 4.17 | ஆராய்ச்சி விடய பட்டப்படிப்பினை விடயமொன்றாக பயிலுகின்ற மூன்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 07 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட வேண்டிய விசேட ஆராய்ச்சி அலகொன்று திணைக்களத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. நாட்டின் அபிவிருத்தி தொடர்பான துறைகளை ஆய்வு செய்வதற்கு அந்தப் பிரிவிற்கு கையளிக்கப்படாமல் முறையற்ற விதத்தில் கேள்வி கோரி வெளிநிறுவனமொன்றிற்கு ரூபா 3,380,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட அறிக்கை எந்த நடவடிக்கைக்காகவும் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 | 4.7 | தகவல் திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தின் நிர்மாணம் தொடர்பாக மதியுரையாளராக செயற்பட்ட பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினதும் தகவல் திணைக்களத்தினதும் உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களுக்கு பதிலாக செய்யப்பட வேண்டிய சீராக்கங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,623,634 தொகையினை அறவிடுவதற்கு பொறியியலாளர் கூட்டுத்தாபனம் பரிந்துரைத்திருந்த போதிலும் மேலதிகமாக கொடுப்பனவை 2017 திசெம்பர் ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 3.11 | (அ) | இலங்கை ஊடக சங்கத்தின் மதுபானம் விற்பனை செய்யும் அனுமதிப்பத்திரம் 2008 ஆம் ஆண்டு முதல் முறையான உடன்படிக்கையின்றி வெளிநபரொருவருக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன், அத்தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,653,515 தொகையை அறவிடுவதற்கோ அல்லது சட்ட விரோதமாக மதுபான அனுமதிப்பத்திரமொன்று வைத்திருத்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை மதுவரி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக அம்முகவரிக்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) அபிவிருத்தி தொடர்பாக மானிட கொள்கைகளை விசாரித்து வெளிக்களப் பரிசோதனை மற்றும் மனித நேய பணிகளுக்கு முன்னரும் பின்னரும் தமிழ் மக்களின் நலன்களுக்காக அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ தற்போது சர்வதேசத்தில் செயற்படும் முறைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவதற்காக ஆராய்ச்சி ஒப்படையொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றாமல் ரூபா 4,130,000 மனித மற்றும் அபிவிருத்தி தொடர்பான கேந்திரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறான நிறுவனமொன்று குறிப்பிடப்பட்ட முகவரியில் இல்லையென கண்டறியப்பட்டது. அவ்வாறே சமர்ப்பிக்கப்பட்ட மற்றைய இரண்டு கேள்விதாரர்களும் முகவரியில் இல்லையென கண்டறியப்பட்டது. அதன் பிரகாரம் இப் பெறுகையின் போது சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.

**2.7 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **ஆண்டு** | **செலவின வகை** | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 2013 | மீண்டெழுபவை | 181.20 | 179.41 | 1.79 | 0.99 |
| | மூலதனம் | 9.85 | 9.69 | 0.16 | 1.62 |
| | **மொத்தம்** | **191.05** | **189.09** | **1.96** | **1.03** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டெழுபவை | 191.65 | 185.20 | 6.45 | 3.37 |
| | மூலதனம் | 23.05 | 21.12 | 1.93 | 8.37 |
| | மொத்தம் | **214.70** | **206.32** | **8.38** | **3.90** |
| 2015 | மீண்டெழுபவை | 216.36 | 179.64 | 36.72 | 16.97 |
| | மூலதனம் | 18.54 | 13.82 | 4.72 | 25.46 |
| | **மொத்தம்** | **234.90** | **193.47** | **41.43** | **17.64** |
| 2016 | மீண்டெழுபவை | 212.50 | 190.19 | 22.31 | 10.50 |
| | மூலதனம் | 26.50 | 22.78 | 3.72 | 14.04 |
| | **மொத்தம்** | **239.00** | **212.97** | **26.03** | **10.89** |
| 2017 | மீண்டெழுபவை | 288.13 | 277.99 | 10.14 | 3.52 |
| | மூலதனம் | 39.64 | 25.09 | 14.55 | 36.71 |
| | **மொத்தம்** | **327.77** | **303.08** | **24.69** | **7.53** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல்**

மீளாய்வாண்டிலும் முன்னைய 02 ஆண்டுகளிலும் மூலதன நிதிஏற்பாடுகளின் சேமிப்புக்கள் 14 சதவீதம் முதல் 36 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

**(அ) மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளல்**

04 செலவின விடயங்களுக்காக ரூபா 16.6 மில்லியன் மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 10.5 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் 21 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 21001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 12.0 | 11.7 | 7.5 | 7.8 | 40.0 | 31.6 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சேவையை வரிதாக்கிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான ரூபா 195,040 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 179,855 ஆன கடன் மீதி என ரூபா 374,895 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த கட்டுநிதி கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த செயற்பாட்டிற்கான உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். எனினும் 68 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,693,561 கூட்டுத்தொகையான குறித்த செயல்நிமித்த கட்டுநிதி 1 மாதத்திலிருந்து 8 மாதங்கள் வரையான காலப்பகுதி தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

## 2.10 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் காணப்படும் பொது வைப்புக் கணக்கொன்றில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 7.99 மில்லியனாக இருந்தது. அதில் 2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 7.8 மில்லியன் கூட்டுத்தொகையான 11 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்கப்படாமை

திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது திணைக்களங்களில் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட தமது கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 123.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 504,081 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 7 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 4 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 236 | 180 | 56 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 47 | 6 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 22 | 07 | 15 |
| | | ------------ | ------------ | ------------- |
| | மொத்தம் | 343 | 245 | 98 |
| | | ======= | ======= | ======= |